இணைப்பு I

[34-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 397-க்கான விடையைக் காண்க]

விவர அறிக்கை.

இந்த நாட்டில் மலேரியா பிரச்சினையைக் கட்டுப்படுத்துவதற்கு மாநிலங்களில் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் நிறைவேற்றத்துக்கு இந்திய அரசு திருத்தப்பட்ட செயல் திட்டத்தை வகுத்துள்ளது. மலேரியா நோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்து, எல்லா நோயாளிகளுக்கும் தவறாமல் முறைப்படி சிகிச்சை அளித்தல் மற்றும் மலேரியா பரவுதலைக் குறைப்பதற்காக எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் மூலம் மலேரியாவினால் ஏற்படும் இறப்பு மற்றும் நலிவைக்குறைத்தல் அல்லது ஒழித்தல் திருத்தப்பட்ட செயல்திட்டத்தின் குறிக்கோள். அதன்படி இந்த மாநிலத்தில் மலேரியா திட்டம் 1-4-77-லிருந்து திருத்தி அமைக்கப்பட்டது.

2. இத்திட்டத்தை மாவட்டங்களில் நிறைவேற்றுவதற்கு ஆரம்ப நல்வாழ்வு நிலையங்கள் அடிப்படை அமைப்புகளாக விளங்குகின்றன. ஆரம்ப நல்வாழ்வு நிலையப் பகுதியில் மலேரியா வேலை பற்றிய மொத்தப் பொறுப்பு ஆரம்ப நல்வாழ்வு நிலைய மருத்துவ அலுவலருடையதாகும். மாவட்ட அளவில் மாவட்ட நல்வாழ்வு அலுவலர் திட்ட நிறைவேற்றத்துக்குப் பொறுப்பாவார். இரண்டு முதல் மூன்று மாவட்டங்கள் ஒரு மண்டலமாக்கப்பட்டு, மண்டல அலுவலர் (மலேரியா) என்று அழைக்கப்படும் மக்கள் நல்வாழ்வு உதவி இயக்குநரின் கீழ் இயங்குகிறது. இவர் அந்த மண்டலத்தில் திட்டமிட்டு வழிகாட்டி, திட்டத்தை மேற்பார்வை இடுகிறார். மாநிலத் தலைமை அலுவலகத்தில் இணை இயக்குநர் (மலேரியா) இத்திட்ட நிறைவேற்றப் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளார்.

3. இத்திட்டத்தின் கீழ், மலேரியா களப்பணியாளர்கள் பதினைந்து நாட்களுக்கொருமுறை ஒவ்வொரு குடும்பமாகச் சென்று பார்த்து, மலேரியா காய்ச்சல் நோயாளிகளை கண்டறிந்து எல்லா மலேரியா நோயாளிகளுக்கும் அடிப்படை சிகிச்சை அளிக்கின்றனர். இந்த மாநிலத்தில், மொத்தம் 4,492 அடிப்படை நல்வாழ்வு பணியாளர்கள், பதினைந்து நாட்களுக்கொருமுறை காய்ச்சல் நோயாளிகளைக் கண்காணித்துச் சிகிச்சை அளிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

4. மலேரியா பரவும் பகுதிகளிலும் தொலைத்தூரக் கிராமங்களிலும் திருத்தப்பட்ட செயல் திட்டத்தின்படி "காய்ச்சல் சிகிச்சைக் கிடங்குகள்" மற்றும் "மருந்து வழங்கு நிலையங்கள்" அமைக்கப்படுகின்றன. இதனால் எல்லா நேரங்களிலும் எளிதில் அணுக முடியாத கிராம மக்களுக்கு

1979 மார்ச் 14]

மலேரியா தடுப்பு மருந்துகள் கிடைக்கின்றன. இந்நிலையங்கள் ஆர்வமுள்ள உள்ளூர் மக்களின் ஒத்துழைப்புடன் நடத்தப்படும். இப்போது 2985 காய்ச்சல் சிகிச்சைக் கிடங்குகள் மற்றும் 4,594 மருந்து வழங்கு நிலையங்கள் பொது மக்களின் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய நிலையங்கள் மேலும் பல அமைக்கப்பட உள்ளன.

5 மேலும், மருத்துவ நிறுவனங்களில் 198 மலேரியா சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்களில் இரத்தமெடுத்துப் பரிசோதனை செய்யப்பட்டு மலேரியா நோயாளிகளுக்கு உடனடி சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப் படுகிறது.

6. மலேரியா பரவுதலைக் குறைப்பதற்கான ஆதார நடவடிக்கையாக DDT/BHC மலாதியான் முதலான உரிய பூச்சி கொல்லி மருந்துகளைத் தெளிக்கின்ற வேலை இந்த மாநிலத்தில் மலேரியா பரவும் பகுதிகளில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

7. நகர்ப்பகுதிகளில் மத்திய அரசின் நகர்ப்புற மலேரியா ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் மலேரியா பிரச்சினை சமாளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இந்திய அரசு வழங்கிய மருந்துகளைக் கொண்டு புழுப்பருவ கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் படுகின்றன. இப்போது இத்திட்டம் சென்னை, சேலம், ராசிபுரம், எளம்பிள்ளை, தூத்துக்குடி, வேலூர், ஈரோடு ஆகிய நகரங்களில் நிறைவேற்றப் படுகிறது. மேலும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 5 நகரங்களிலும் காய்ச்சல் நோயாளிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட இரத்தப் பரிசோதனை செய்வதற்கான ஆய்வக வசதிகளுடன், மலேரியா நோயாளிகளைக் கண்டறிவதற்காக தமிழ்நாடு அரசு கண்காணிப்பு அமைப்பு ஒன்றையும் ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டம், கட்ட அடிப்படை யில் மேலும் பல நகரங்களுக்கு விரிவு படுத்தப்பட உள்ளது.

8. கொசு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தேவையான விதி முறைகள் பொதுச் சுகாதாரச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளன. மலேரியா தடுப்புக்காக கொசுதொல்லையை ஒழிக்க இவ்விதி களைப் பின்பற்றும்படி உள்ளாட்சி நிறுவனங்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளன. மேலும் மலேரியா மற்றும் பிற கொசுவினால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துவற்காக, கொசு உற்பத்தி யாகும் இடங்களை ஒழிப்புதற்கு சிறு பொறியியல் வேலை களையும் மேற்கொள்ளும்படி உள்ளாட்சி நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
8 JUL 1980
MADRAS-600 009